Registered as a News Paper          பக்கங்கள் 04          விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM          Peoples Daily          மக்கள் தினசரி

நாதம் 03     திருவள்ளுவர் ஆண்டு 2023     கார்த்திகை 07     (22-11-1992)     ஞாயிற்றுக்கிழமை     ஓசை 278

## பழுதடைந்த 'பாஜ்'களினால் தொழிலாளருக்கு இன்னல்

பருத்தித்துறை இறங்கு துறையில் பழுதடைந்த 'பாஜ்'களினால் கப்பலில் இருந்து உணவுப் பொருள்களை இறக்குவதில் தொழிலாளர்கள் கஷ்ட நிலையையும் ஆபத்து நிலையையும் எதிர் நோககி வருகின்றனர். இத்துறைமுகத்தில் உள்ள ஐந்து 'பாஜ்'களில் மூன்று 'பாஜ்'கள் துவாரங்கள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. இந் நிலையில் உள்ள 'பாஜ்'களில் உணவுப் பொருள்களை ஏற்றிவரும் போது கடல் நீர் உட் புகுந்து 'பாஜ்', தொழிலாளர்கள், உணவுப் பொருள்கள் அனைத்தும் கடலில் மூழ்கும் நிலை அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. இதன் போது நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை ரோந்து

[வடமராட்சி]

சிறிலங்கா கடற்படையினரின் 'நய்க்கூடு' என்றழைக்கப்படும் பெரிய கப்பல் நீண்ட நாட்களுக்குப் பின் இன்று மீண்டும் பருத்தித்துறை கடற் பகுதியில் ரோந்து சென்றது.

நண்பகல் 12 30 மணியளவில் இப்பெரிய கப்பலுடன் விசைப்படகு ஒன்றும் இணைந்து ரோந்து சென்றதை அவதானிக்க முடிந்தது.

வடமராட்சிப் பகுதிகளில் கடந்த கால யுத்த நடவடிக்கையின் போது இக் கப்பல் கடலில் நங்கூரமிட்டு தரித்து நின்று பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (யோ)

### குண்டு வெடிப்புகளின் எதிரொலி

# கொழும்பில் பாரிய தேடுதல் வேட்டை

# நூற்றுக்கணககில் தமிழர்கள் கைது

## வர்த்தகர்கள் மீதும் விசாரணை

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பலநூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றவியல் புலன் விசாரணைப் பிரிவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் வெளிநாடு செல்வதற்கென கொழும்பில் தங்கியிருந்தவர்கள், தனியார் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்கள், வியாபாரிகள் உட்பட மேலும் பலர் அடங்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 18 ஆம் திகதி மட்டும் 300 க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றவியல் புலன் விசாரணை பொலிஸ் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது பற்றி அவர் தெரிவித்ததாவது; கடற்படை தளபதியின் படுகொலையை தொடர்ந்து முன்னர் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், 18ஆம் திகதி மட்டும் பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, தெகிவளை, இரத்மலானை பகுதியில் 300 க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கைது செய்யப்பட்ட பகுதியில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றி இருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் தனியார் நிறுவனங்களில் கடமை புரிபவர்களும் அடங்குவார்கள் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இக் கைது நடவடிக்கை தொடர்ந்தும் இடம் பெறுவதாகவும் 18 ஆம் திகதிக்குப் பின்னர் மேலும் பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மண்மீட்புப் போரில் வரலாறுபடைத்து சரித்திரமான மாவீரர்கள்

இவர்கள் தற்கொடையாளர்கள், அர்ப்பணிப்பாளர்கள் உறவு, கல்வி, வாழ்வைத் துறந்தவர்கள், விழித்திருந்து எல்லையைக் காத்து நின்றவர்கள், வரலாறு படைத்து இம் மண் மீட்பில் சரித்திரமானவர்கள், இம்மண்மீட்புப்போர் அணைத்துக்கொண்ட முதல் மாவீரர் சத்தியநாதன் என்கின்ற லெப்டினன்ட் சங்கர் தன்னை அர்ப்பணித்த நவம்பர் 27 தான் மாவீரர் நாள். இவ்வாறு மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமிழீழவிடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளையே நாம் மாவீரர் நாளாகவும், இத்தமிழீழ நாட்டின் தேசிய நாளாகவும் கொண்டாட எமது தலைமைத்துவம் பிரகடனம் செய்துள்ளது. எமது மாவீரர்களாகிய எமது உடன்பிறப்புக்கள் சிந்திய குருதியும், தற்கொடை செய்த அர்ப்பணிப்பும் தான் எமது ஈழதேசத்தின் விடுதலையை வீறு பெறச்செய்து, வெற்றிமேல் வெற்றிவாகை சூட வழி நடத்துகிறது. வாழ்வில் பொருளாதாரத்தில் நிர்வாகத்தில், சுய நிர்ணய உரிமையுடன் எம்மையே நாம் ஆண்டுகொள்ள இன்று அமைந்து வரும் சூழ்நிலைகள் யாவும் இவர்கள் தற்கொடையினால் ஆனவை என்பதில் ஐயமில்லை.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மாவீரர் வார நிகழ்வுகள் உணர்வுபூர்வமாகநேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பித்து வைக்கப்பட்டது.

அனைத்திலும் தேசியக்கொடி

டது.

யாம். மாவட்டத்தில் உள்ள

## 12 தொழிற்சங்க பிரதிநிதிகள் மலையகத்தில் கைது

### கடற்படை தளபதி கொலையுடன் தொடர்பாம்

[கொழும்பு]

தீவிரவாதிகளுடன் தொடர்பு என்ற சந்தேகத்தின்

டங்களில் உள்ளவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் இதனால் மக்கள் மத்தியில்

டவர்கள் கொடுத்த தகவலை தொடர்ந்து தாங்கள் 12 வீடுகளை சோதனையிட்டதாக

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தாயக விடுதலைப் போராட்டத்தில் தியாகமரணமடைந்த மாவீரர்களை நினைவு கூரும் இவ் ஆண்டுக்கான தமிழீழ மாவீரர் வாரம் தமிழீழம் எங்கும் எழுச்சி பொங்க உணர்வு பூர்வமாக நேற்று ஆரம்பமாகியது.

நேற்றுக்காலை சரியாக 9-00 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடி சம்பிரதாய பூர்வமாக ஏற்றி வைக்கப்பட்டதுடன் மாவீரர் வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழத்தில் பல்வேறுபகுதிகளிலும் உள்ள அனைத்து அரச, தனியார்துறை அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உட்பட பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களி மற்றும் விடுதலைப்புலிகளின் அரசியற்துறை மாவட்டச் செயலகம் உட்பட ஏனைய அலுவலகங்கள், பாசறைகள், பயிற்சி முகாம்கள் ஆகியவை அனைத்திலும் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. தேசியக் கொடி ஏற்றும்போது தமிழீழ தேசியக் கொடி ஏற்றப் பாடல் இசைக்கப்பட்டது.

தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து 9-01 மணி முதல் 9-03 மணி வரை விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களிற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது இதைத் தொடர்ந்து தேசியக்கொடிக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச செயலகத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அதேவேளை யாழ். கல்வித் திணைக்களத்தில் யாழ். கல்விப்பணிப்பாளர் திரு.ஆர் சுந்தரலிங்கமும், யாழ். பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் துரைராஜாவும் தேசியக் கொடியை ஏற்றி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி பகுதியில் சுப்பர்சொனிக் தாக்குதல்

சிறிலங்கா விமானப்படையினரது சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் கிளிநொச்சியில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

கடந்த புதன்கிழமை காலை 9 00 மணியளவில் கிளிநொச்சிப் பகுதியின் வான் பரப்புக்குள் பலத்த இரைச்சலுடன் இரண்டு சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் நுழைந்து கொண்டன. இந்த இரு விமானங்களும் கிளிநொச்சி 155 ஆம் கட்டை பிரதான வீதியில் உள்ள அந்தோனியார் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல்களை நடத்தின. இந்த இரு குண்டுவீச்சு விமானங்களும் வீசிய குண்டுகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன. குண்டு வெடித்த இடத்தில் சுமார் 20 அடி ஆழமான குழிகள் காணப்பட்டன. இப்பகுதிகளில் இருந்த மின்கம்பங்கள் தூக்கி வீசப்பட்டு முறிந்த நிலையில் ஆங்காங்கு காணப்பட்டன. அருகில் காணப்பட்ட அந்தோனியார் ஆலயமும் சேதமடைந்தது.

இக்குண்டுத் தாக்குதல் காரணமாக மேற்படி பகுதி மக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர்.

# ரோந்துப் படகு மீது கடற்படையினர் சூடு

## ஒரு சிப்பாய் பலியானதாக தகவல்

காவல் கடமையிலிருந்த கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு சக கடற்படை சிப்பாய் ஒருவர் பலியான சம்பவம் மண்டை தீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

மண்டை தீவுக் கடற்கரையோரத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படை வீரர் கடற்படையினரின் படகு வருவதனைக் கண்டு விடுதலைப் புலிகளின் படகாக இருக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாக படகை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது படகில் இருந்த கடற்படை சிப்பாய்களில் ஒருவர் பலியானதாக தெரிவிக்கப் படுகிறது.

# கண்டியில் குண்டு வெடிப்பு; இரு பொதுமக்கள் காயம்

கண்டி மாவனெல்லையில் குண்டுவெடித்து பொதுமக்கள் இருவர் படுகாயம் அடைந்ததாகவும், பலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகி இருப்பதாகவும்மாவனெல்லை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கண்டி வீதியில் மாவனெல்லை பெலிகம விகாரை வளவில் 19ஆம் திகதி இந்த குண்டுவெடிப்பு நடைபெற்றதாகவும், இந்த குண்டு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவெடித்திருந்தால் நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழக்க நேரிட வேண்டி இருந்திருக்கும். ஏனெனில் இந்தவளவில் ஒரு கூட்டம் நடைபெற்றது என தெரிவிககப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் இன்னும் ஒருவரும் கைது செய்யப்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'பிரேமா' வருகையையிட்டு வவுனியாவில் கெடுபிடி

(வவுனியா)

எதிர்வரும் 28ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாசா வவுனியா வருகை தருவதை முன்னிட்டு வவுனியா நகரில் இராணுவ பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட திகதி வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் புதிய ஆடைத்தொழிற்சாலை ஒன்றை வைபவரீதியாக திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி சிலஅமைச்சர்கள் சகிதம் வருகைதரவுள்ளார்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்குடனும், வன்செயலைத் தடுக்கும் நோக்குடனும் வவுனியாநகரில்வசிப்போர்மீதான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நகர எல்லைப்புறப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்கள் இராணுவ, மற்றும் பொலிசாரின் தீவிர விசாரணைக்குட்படுத்தப் படுகின்றனர்.

வவுனியா நகரில் நிரந்தர, தற்காலிக அனுமதி பெற்று தங்கியுள்ளோர் இராணுவத்தின் திடீர் சோதனைக்கு உள்ளாகின்றனர். (தி)

...ரீபு என்ற சந்தேகத்தின் பேரில் கோட்ட தொழிலாளர் தொழிச் சங்கங்கள் பிரதிநிதிகள் உட்பட எட்டு தமிழர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படைத் தளபதியின் மரணம் தொடர்பாகவே இக்கைது நடைபெற்றுள்ளது. நானுஓய, ராகல, உடப்புசல்லாவை, பதுளை ஆகிய தோட்... இதனால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுகிறது.

பொலிசார் இது பற்றி தெரிவிக்கையில் கைது செய்யப்பட்... களை சோதனையிட்டதாகவும், அங்கிருந்து 2 தன்னியக்க துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும்கூறினார்கள்

# ஏழு தமிழ் வர்த்தகர் உட்பட 12 பேர் கொழும்பில் கைது

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டமை தொடர்பாக மேலும் 12 தமிழர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்

இவர்களில் எழுபேர் வர்த்தகர்கள். ஏனைய ஐவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது

இவ் ஏழு வர்த்தகர்களும் கொலைச் சந்தேக நபருக்கு உதவி செய்தார்கள் எனவும், கொலைச் சந்தேக நபர் மேற்படி குடும்பத்தவர் வசிக்கும் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்பவர் எனவும் கிடைத்த தகவல்களை அடுத்தே இப் 12 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வெல்லமுடியாத போர் இராணுவம் உணருகிறதாம்

(கொழும்பு)

இந்தப் போர் வெல்லப்பட முடியாத ஒன்று என இராணுவத்தினர் இப்போது உணருகின்றார்கள் என்று கம்பஹா மாவட்ட எம்பியான லஷ்மன் ஜெயக்கொடி கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; இராணுவத்துக்கான கொள்கை வகுக்கும் அமைப்புகள் மீதும் இராணுவத்தினர் நம்பிக்கையை இழந்து விட்டனர் என்றும் தெரிவித்தார்.

# கோடிக்கணக்கில் செலவு பிரயோசனம் இல்லை

## நிமால் சிறிபால

(கொழும்பு)

"இந்தநாட்டின் பாதுகாப்பு முழுமையாக நிர்மூலம் ஆக்கப்பட்டு விட்டது" என கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்: கோடிக்கணக்கான பணத்தைஅரசுயுத்தத்திற்குசெலவழித்த போதும்பொதுமக்களை பாதுகாக்க முடியாதுள்ளது. குறைந்த அளவில், இராணுவ உயர்அதிகாரிகளைகூட பாதுகாக்கமுடியாது திண்டாடுகிறதுஎன்றார்.

"அவர் மேலும்தெரிவிக்கையில் கொழும்பில் இன்னும் சில இடங்களில் குண்டுவெடிக்கலாம் என பிரதமர் டி. பி. விஜயதுங்காதெரிவித்துள்ளார்

இன்றைய அரசு தான் 15 வருடகால பயங்கரவாத ஆட்சியை நடத்துகிறதும் ஒரு தேர்தலை நோக்கி நாட்கள் நெருங்குவதால் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தவே அரசு இப்படியான செய்திகளைபரபபிவருகிறதுஎன்றார்

# குண்டுவைக்கும் குழு கொழும்பில் நடமாடுகிறதாம்

(கொழும்பு)

ஆறுபேரைக் கொண்ட குண்டு வைக்கும் கோஷ்டியொன்று கொழும்பில் நடமாடுவதாக பொலிசார் கூறியுள்ளனர். மட்டக்களப்பைச் சேர்ந்த ரமணன் என்பவரின் தலைமையில் மட்டக்களப்பு பகுதியிலிருந்து-இக் குழுவினர் வந்திருப்பதாகவும் இவர்கள் கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோவின் கொலையுடனும் தொடர்பு கொண்டிருப்பதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

**வேங்கை அணியல்லால் வேறெவரும் இல்லையென்று ஓங்கட்டும் இங்கிருந்தோர் குரல்.**

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன. பல வர்ணக் கலர்களில் விளம்பரம் பதிப்பித்தும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தை தவிர்த்துக்கொள்ளுங்கள். ஸ்ரீ காந்தா அச்சகம்- புத்தகசாலை 330, காங்கேசன்துறைவீதி. யாழ்ப்பாணம். (3640)

பன்டேஜ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. ஆதவன் மருந்தகம், கைதடிச் சந்தி. (சி-3222)

யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு வினாயகர் வீதியில் வீட்டுடன் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: என். தில்லைவினாயகம் பிரசித்த நொத்தாரிசு, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம். (சி-5430)

நல்ல இன அடை முட்டை (B1—HYBREED) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: முகாமையாளர் கா. உ. சு. திணைக்களம், விவசாயப் பாடசாலை, திருநெல்வேலி. (3673)

### எம். ஜி. ஆர். திருமண சேவை

1960ஆம் ஆண்டுக்கு முன்பு பிறந்த பெண்களுக்கு மணமகன்கள் தேவை, தாரம் இழந்த மணமகன்கள், மணமகள்களும் தேவை. தொடர்பு: வே. புண்ணியமூர்த்தி, புத்தூர் சந்தி, மீசாலை. (3362)

### மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5409)

### பற் சிகிச்சை

## கூட்டுறவாளரின் மாவீரர் வார விழா

தீவக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாவீரர் எழுச்சி விழா இன்று பி. ப. 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகுமாரசாமிமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

தீவக பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஒன்றியத் தலைவர் திருவாளர் ப. கனகலிங்கம் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் பிரதம விருந்தினராக தீவக தளபதி திரு. த. வில்லவன் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக தீவகக் கோட்டத்தைச் சேர்ந்த அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. சேரலாதன் கலந்து கொள்கிறார். மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

தென்மராட்சிக் கோட்ட கூட்டுறவாளரின் மாவீரர்தின விழா வரும் திங்கட் கிழமை பிற்பகல் 4 30 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தென்மராட்சிக் கோட்டத் தலைவ க. பத்மகாந்தன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

தீவக கோட்டகூட்டுறவு ஒன்றியம்

## அழைப்பிதழ்

## தமிழீழ மாவீரர் நாள் விழா

### தீவகக்கோட்டம்

1992 தமிழீழ மாவீரர் தின விழாவை முன்னிட்டு தீவக கூட்டுறவுச் சங்கங்களும், தீவக கூட்டுறவாளர்களும் இணைந்து இன்று 22 - 11 - 1992 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மாவீரர் தின விழா சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வேளையில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர், சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், பொதுச் சபை உறுப்பினர்கள், கூட்டுறவாளர்கள் தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ப. கனகலிங்கம்
தலைவர்
தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியம்
[சி-5446] தீவகம்

## மரண அறிவித்தல்

### செல்லையா நடராசா (துரை)

செல்லையா நடராசாவின் ஈமக்கிரியைகள் நேற்று (21-11-9?) பிற்பகல் 2 மணியளவில் மல்லாகம் கல்லாரையில் நடைபெற்று, மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

கல்லாரை,
மல்லாகம்.

தகவல்:
ஜீவா (மகன்)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை
விக்ரோறியா
[அன்ரன்
புஸ்பராணி]

தாயின்மடியில்:
15.11-1973

## நினைவு கூருகின்றோம் ...

### 1992-11-22

1984-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு-களுதாவளைப்பகுதியில். சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1986-ம் ஆண்டு ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-
(பிரதேசபடைத்தளபதி)

★ சந்திரன் ஸ்ரீபன் (செல்வநாயகபுரம், திருக்கோணமலை)

(பிரதேச உதவிப்படைத்தளபதி)

★ தியோகு டேவிட் [முருங்கன் - மன்னார்]

1987-ம் ஆண்டு சாவகச்சேரி பேருந்து நிலையத்தின் மீது, சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

அசோக்/யூட் [மயில்வாகனம் சந்திரசேகர்-தெல்லிப்பழை-யாழ்]

1988-ம் ஆண்டு கைதடிப்பாலத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உடகொண்டு வீரச்சாவெய்திய-

துர்க்கா / பரதர் [பரஞ்சோதி சுகுமார் - நாவற்குழி கிழக்கு-யாழ்]

வவுனியாவில், தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட-
நாட்டுப்பற்றாளரான-

பூலோகசிங்கம்

பாவற்குளம், 4-ம் படிவம்பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட -
நாட்டு பற்றாளரான-

ந. பாலகுரு

1990-ம் ஆண்டு மாங்குளம் பகுதியில் சிறிலங்காப் படை முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப்.சுபோ [சுமதி கந்தையா-மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி-யாழ்]

கப்டன் ரஜனி [பரமேஸ்வரி சங்கரப்பிள்ளை-அலைக்கல்லு போட்டகுளம், ஓமந்தை-வவுனியா]

கப்டன் டோறா [பத்மாவதி கந்தப்பு-'சசிஇல்லம்', உச்சில் ஒழுங்கை, கரவெட்டிதெற்கு-யாழ்]

மரிஸ்ரெலா [ஜெனோ பிரான்சீஸ்-முள்ளியான், வெற்றிலைக்கேணி]-

டயானா [கவிதா தங்கராசா - குகன் தோட்டம், அலம்பில்-மணலாறு]

பெனாசிர் [ஜமுனா சிவபாதலிங்கம் - 5-ம் கட்டை, அலம்பில்-மணலாறு]

விக்டோரியா [புஸ்பறியானி அன்ரன்-ஊறணி, ஊரிக்காடு, மயிலிட்டி-யாழ்]

2.ம் லெப் இலக்கணா [பிறேமினி பாலச்சந்திரன் நுணாவில் கிழக்கு, கல்வயல்,சாவகச்சேரி-யாழ்]

2-ம்லெப். வைதேகி (சீதாலட்சுமி சின்னத்தம்பி - புலோலிமேற்கு, தம்பசிட்டி-யாழ்)

ரசிக்கா (யாழினி சத்தியநாதன் - 09/06, மகேந்திரன் வீதி, அரியாலை-யாழ்)

கோமகள் (சித்திரா சிவானந்தம்-கப்புது, கரவெட்டி-யாழ்)

2.ம் லெப்.கிரிஜா (இரத்தினவதி சுந்தரம் - இமையாணன், கரணவாய் தெற்கு, கரவெட்டி-யாழ்)

தமிழ்ச்செல்வி (சுமங்களா சதாசிவம் -அக்கரைப்பற்று-அம்பாறை)

கோணேஸ் (பேபிசகிலா சுப்பையா-பாரதிபுரம் கிளிநொச்சி)

## கல்வி ஆண்டு 1993

■ O/L Dec.-93

■ ஆண்டு 4 - 10 வரை
[புதிய பிரிவுகள்]

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

டிசம்பர் 5இல் ஆரம்பம்

❋ புதிய அனுமதிகள் யாவும் டிசம்பர் 31க்குப் பின் வழங்கப்பட மாட்டாது.

❋ முன்கூட்டியே பதிந்து உங்கள் இடத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

"20 வருட சேவையில் உயர்ந்து விளங்கும் உன்னத நிறுவனம்" (சி-5029)

## ஓராண்டு நினைவலைகள்

வீர ஜனனம்;
17
|
04
|
1974



வீரச்சாவு:
22
|
11
|
1991

### வீரவேங்கை பெரியதம்பி (சகுன்)

(தங்கவேல் தங்கேஸ்வரன்)

ஆண்டு ஒன்று ஆன பின்னும்
ஆறவில்லை எம் துயரம்,
காண்பதெப்போ ? காண்பதெப்போ ?
கண்ணில் நீர் ஓயவில்லை,
மாண்டுவிட்ட மாவீரனே !
மறக்குலத்தின் தவப்புதல்வனே.
தாயவளின் மடி இங்கு
உன் தலைவைக்க தவித்திருக்க
நீயோ தாயகத்தின்
மடியெங்கும் பரந்து படுத்திருந்தாய்,
மீண்டும் இங்கு பிறந்து நீ வா
மேன்மையுடன் தமிழீழம்
தோன்றுகையில் - பேரழகனே
நீ வீறுகொண்ட வேங்கைகளுடன்
கூட நிற்பாய்

இன்று (22 - 11 - 1992) இவரது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவலைகள் வைபவத்தில் (மதிய போசனத்தில்) உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு

## பற் சிகிச்சை

பற் சிகிச்சை நிலையம் (எஸ். பி. சாமி அன் கோ. கட்டிடம்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தினசரி 12 ந.ப. -2 பி.ப. வரை. (சி-3216)

## உடன் விற்பனைக்கு

பிறிமா பிறவுண் + கறுப்பு பேட்டுக் குஞ்சுகளும் கோழிகளுக்கான மருந்துகளும் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (3223)

## கடிகாரமா?
## றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284) ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி 5399)

## தாதி தேவை

தொடர்பு கொள்ளவும்: DR.P சொர்ணலிங்கம், குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [3680]

## தவறிவிட்டது

நாச்சிமார் கோவிலடிக்கும் மருதனார்மடத்திற்கும் இடையில் மோட்டார் சைக்கிள் C.G 125 புத்தகம் (நீலநிறம்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3683)



தாயின்மடியில்:
15.11-1973

தாயகமண்ணில்:
22-11-1990

உனது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

மயிலிட்டி, காங்கேசன்துறை. (3676) குடும்பத்தினர்

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
05-03-1949

மறைவு
23-10-1992



### வயிரமுத்து - ஆலககுமமணஸ்வரன
(பவா)

(முருகன் கமக்களஞ்சிய உரிமையாளரும் வர்த்தகரும்)

அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்வதுடன் கைதடி மேற்கில் இன்று (22-11-1992) ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

தாய், சகோதரர்.
(3663)

...அம்பாறை)

கோணேஸ் (பேபிசகிலா சுப்பையா-பாரதிபுரம் கிளிநொச்சி)

2.ம் லெப் பெ. ன்னி (பிரமிளா செல்வமாணிக்கம் பொலிகண்டிச்சந்தி, வல்வெட்டித்துறை யாழ்)

கப்டன் வதனன் [தங்கராசா ராஜேஸ்வரன் [சிறி] குமுழமுனை- )

2.ம் லெப். அருணா (அந்தோனிப்பிள்ளை விஸ்வராஜ்- அலம்பில்- மணலாறு)

லிங்கம் (முத்துலிங்கம் சோதிவேல் - 214, வட்டக்கச்சி- கிளிநொச்சி)

மேஜர் திலீப் (அழகுரத்னம் விக்னேஸ்வரன்- கனகராயன்குளம், ஓமந்தை - வவுனியா)

துஸ்கர் (கிருஸ்ணசாமி இலட்சுமணன்- வில்சன் வீதி, மயிலங்காடு - கிளிநொச்சி)

அர்ச்சுனா (மயில்வாகனம் ரவி- பாரதிபுரம் கிழக்கு கிளிநொச்சி)

ரூபன் (சிவசாமி குமாரவேல் - விஸ்வமடு- கிளிநொச்சி)

2-ம் லெப், நிராஜ் (செல்லத்துரை சிவனேசச் செல்வன் பெரியகுளம்வீதி நெடுங்கேணி - மணலாறு)

அன்பழகன் (மயாண்டி பாலகிருஸ்ணன் - சின்னசாளம்பன், ஒட்டிசுட்டான் -முல்லைத்தீவு)

2-ம் லெப். மகான் (பாலசுந்தரம் பாலவரதன் - கணுக்கேணி, முள்ளியவளை - முல்லைத்தீவு)

பிரபு

2-ம் லெப். நாதன் (சின்னத்தம்பி ரவீந்திரன் - கிராஞ்சி, பூநகரி- மன்னார்)

லோகன் (இரத்தினசிங்கம் புவனேந்திரன்- கிளிவெட்டி, மூதூர் - திருக்கோணமலை)

கண்ணன் (சுப்பையாதேவர் துரைராசா- பொன்நகர்- கிளிநொச்சி)

விசு (வேலு சித்திரகுமார் - 2-ம் வாய்க்கால்- கிளிநொச்சி)

2-ம் லெப். அலன் (செபஸ்ரியான் கமலலோஜன் ) 5-ம் வட்டாரம், உடப்பு- -

நிர்மல் (சந்தியாப்பிள்ளை சுஜிந்திரரூபன்- பெரியநொச்சிக்குளம், நேரியகுளம்- வவுனியா)

தனராஜ் (சி. ஆனந்தராஜ் - ஒட்டிசுட்டான்- முல்லைத்தீவு)

பிரதீப் (ஆனந்தராஜ் - மணற்குடியிருப்பு-முல்லைததிவு)

டெனி (நாகமணி குருகுலகுமார் - பூவரசங்குளம் - வவுனியா)

2-ம் லெப். டெனி (நடராசா உருத்திரமூர்த்தி- நொச்சிக்குளம், பன்குளம்-திருக்கோணமலை)

கரன் (ச. நவரத்தினம்- அளம்பில்- மணலாறு)

இன்று (22-11-1992) இவரது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவலைகள் வைபவத்தில் (மதிய போசனத்தில்) உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இராசகிராம வீதி,
கரவெட்டி வடக்கு,
நெல்லியடி,
(சயன்ஸ் சென்ரர் கல்வி நிலையம் அருகாமையில்) சி-5441

குடும்பத்தினர்

ரமணன் (யோசப் ஜெயரட்ணம்- பிரமந்தனாறு, விஸ்வமடு- கிளிநொச்சி)

மாங்குளம்- சிறிலங்காப்படையினரின் முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப். ஜஸ்ரின் (மாணிக்கம் மானில்- கல்மடு, புளியங்குளம்- வவுனியா)

சாவகச்சேரி- சங்கத்தானைப் பகுதியில், சிறிலங்காப்படையினர் விமானத்திலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991-ம் ஆண்டு வவுனியா- செட்டிகுளம் பகுதியில் நிகழ்ந்த, சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண்கள் தகர்ப்பின் போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் பிரபா (செல்வரட்ணம் செல்வகுமார்-சுங்கத்தினைக்களம் வீதி- முல்லைத்தீவு)

தங்கன் (செல்வரட்ணம் கருணாகரன்- சங்கத்தார் வயல், இயக்கச்சி- கிளிநொச்சி)

ஆனையிறவில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

குலேந்திரன் [கார்த்திகேசு சசிகரன் - கரம்பைக் குறிச்சி கிழக்கு, வரணி- யாழ். )

பெரியதம்பி/பேரழகு [தங்கவேல் தங்கேஸ்வரன்- சமரபாகு, வல்வெட்டிததுறை- யாழ். [

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டோராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/5439]

### சிந்தனைக்கு

துணிவும், உணர்வும், உள்ள ஒரு மனிதனின் தலையாய செயல், செயலற்று ஒருபோதும் இராததே. உடலுக்குள் ஆன்மா புகுத்தப்பட்டது வாளாவிருப்பதற்கு அல்ல.

- ஜான் வெப்ஸ்டர் -


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 22-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## வெற்றுப் பேச்சும் பொழுது போக்கும்

கடந்த சில வருடங்களாக சிறிலங்கா பாராளுமன்றம் கூடும்போதெல்லாம் இனப்பிரச்சினை குறித்து காரசாரமான விவாதம் எழுவதும், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதும் வழமையானதொன்றாகும். அதுவும், சிறிலங்கா ஆயுதப்படை தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்படும் காலங்களிலும், வரவு செலவுத் திட்ட விவாதங்களின் போதும் விவாதங்கள் அனல் பறப்பதுண்டு.

பொதுவில் இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணத் தவறிவிட்டது இதனால் அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கோரிக்கை விடுவதும் வழமையானதாகும். இதேவேளை இனப்பிரச்சினைக்கு ஒருவேளை இராணுவத் தீர்வென்றும், மற்றொருவேளை அரசியல் தீர்வு எனவும் அவை தெரிவித்துவருவதோடு, இனப்பிரச்சினைத் தீர்விற்கு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது எனவும் தெரிவிக்கின்றன, சிலவேளை புலிகளுடன் அரசாங்கம் இரகசியப் பேச்சுக்களை நடத்துகின்றது என்று குற்றச்சாட்டு முன்வைப்பதுண்டு, ஆனால், இதுவரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவென அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு இனப்பிரச்சினையின் தீர்வுத் திட்டத்தை பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி சமர்ப்பிக்கவில்லை,

இதேவேளை எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் அரசாங்கக் கட்சி, இனப்பிரச்சினை சிறிலங்கா சுதந்திரக்கட்சி காலத்திலேயே உருவானது என்றும், இனப்பிரச்சினையை தீர்ப்பதில் அரசு அக்கறை காட்டி வருவதாகவும் அரசு பல இராணுவ வெற்றிகளை ஈட்டியுள்ளதாகவும் தெரிவிப்பதோடு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே ஒரேவழி என்றும், இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஈடுபட்டுள்ளதினால் அரசாங்கம் இதற்கு மேல் எதையும் செய்வதற்கில்லை என்றும் தெரிவித்து வருகின்றது. ஆனால், இராணுவத் தீர்வையே, நாடி...

# கிரிமினல் குற்றவாளிகளை எல்லையில் குடியேற்றுக

## --அரசிற்கு பௌத்தபீக்கு ஆலோசனை

(கொழும்பு)

தென்பகுதி தடுப்பு முகாம்களில் சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகளை வடக்கு - கிழக்கில் உள்ள மகாவலி எல்லைக் கிராமங்களில் குடியேற்றுவதன் மூலம் அப்பகுதிகளைப் பாதுகாக்கலாம் என வண. திபுலாகல திதலகம சிலாலங்கார தேரோ சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தென்பகுதியில் கொலை, கொள்ளை போன்ற பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மற்றும் ஜே. வி. பி. சந்தேக நபர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்கும் முகமாகவும் வடக்கு - கிழக்கு எல்லையோர கிராமங்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் முகமாகவும் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஆலோசனையை வழங்கியுள்ளார்.

மேலும் குடியேறுவோருக்குத் தேவையான வசதிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் ஜனாதிபதிக்குக் கூறியுள்ளார்.

<u>இடம் பெயர்ந்த</u>

## கிராம அலுவலர்களின் காரியாலய அமைவிடங்கள்

(யாழ்ப்பாணம்)

அண்மைய இராணுவ நடவடிக்கையால் கோவில்பற்று கிராம அலுவலர்கள் பலரும் தமது முன்னைய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்துள்ளனர். அவர்கள் தற்போது கீழ்வரும் முகவரியில் தமது அலுவலகங்களை அமைத்துள்ளனர்.

பொதுமக்கள் தமது கிராம அலுவலர்களை கீழ்வரும் இடங்களில் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தி. நித்தியானந்தன் யா-145 வடலியடைப்பு—ஆனைக்கோட்டை. ''பூரண கிரி'' நவாலிவீதி, திரு. இ. துரைராசா யா-146 பண்டத்தரிப்பு—சண்டிலிப்பாய் மத்தி கி. அ. அலுவலகம் (ராஜா பாடசாலை அருகாமை) திரு. ந நாகராசா யா-147, பிரான் பற்று—சங்கானை பிள்ளையார் கோவில் பூசகர் வீடு, திரு. ச. நாராயணன் யா-147, சில்லாலை வடக்கு, யா-156 முள்ளானை — உடுவில் வீதி, மானிப்பாய் கிழக்கு, இ. ஆனந்தராசா யா -150 மாதகல் கிழக்கு யா-151 மாதகல் தெற்கு—மே-பா. வே. சி. கந்தையா லோட்டன் றோட், மானிப்பாய்.

ச. சுந்தரமூர்த்தி—யா-152 மாதகல் மேற்கு, யா-155, இளவாலை—சுதுமலை சந்தி, மானிப்பாய். திரு. பி. கபிரியேற்பிள்ளை யா-149 சில்லாலை தெற்கு -- பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.

<u>றுகுணு பல்கலைக்கழகத்திற்குள்</u>

## வெளியார் புகுந்து தாக்கு மூன்று மாணவர் படுகாயம்

(மாத்தறை)

மாத்தறை றுகுணு பல்கலைக்கழகத்தில் நடந்த கைகலப்பில் மூவர் படுகாயம் அடைந்துள்ளனர். மேற்படி சம்பவம் கடந்த செவ்வாயன்று பல்கலைக்கழக வளவினுள் இடம்பெற்றது

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

பல்கலைக்கழக வளவினுள் அத்துமீறிப் பிரவேசித்த வெளியார் சிலர் மாணவர்கள் மீது ... கராபிட்டிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இத் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து மாணவர்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வருவதாகவும், நீதியான விசாரணை தொடராது விட்டால் வகுப்புக்களை பகிஷ்கரிக்கப் போவதாகவும், இதற்கு ஏனைய பல்கலைக்கழக மாணவர்களின் உதவியும் நாடப்படும் எனவும் மாணவர்கள்

### அனுமதி அட்டைகள் வந்தன

[யாழ்ப்பாணம்]

டிசம்பர் 7இல் நடைபெற இருக்கும் க.பொ.த [சா தர] பரீட்சையின் சகல பரீட்சார்த்திகளினதும் அனுமதி அட்டைகள் யாவும் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

### பறி முதல்

[வவுனியா]

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக வடபகுதி நோக்கி கொண்டு வரப்படும் கயிறு வகைகள் இராணுவத்தால் பறிமுதல் செய்யப்படுகின்றன.

மாவீரர் வார நிகழ்வுகளின் போது மக்கள் கயிறு வகைகளை உபயோகிக்கலாம் என்று கருதியே இராணுவம் தடை செய்துள்ளது.

இதே வேளை, மிகக் குறைந்தளவில் வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த பல பொருள்கள் தற்போது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

[ தி ]

### மண் மீட்புப்...

[முதலாம்பக்க தொடர்ச்சி]

இம் மாவீரர்கள் அபூர்வமானவர்கள். இவர்களில் பலர் எமது தலைவரை, தலைமைத்துவத்தையே காணமுடியாமல் இருந்தும் அசைக்கமுடியாத நம்பிக்கையில் தலைமையின் ஆளுமைக்குக் கட்டுப்பட்டு, ஒழுக்கசீலக் கட்டுக்கோப்பை கடைப்பிடித்து, புனிதமானவர்களாக ஆகுதியடைந்தவர்கள் இவர்களை நினைவு கூர்ந்து விழாவெடுத்தல் இம் மண்ணில் வாழுகின்ற எம் அனைவரின் தலையாய கடமையும், கடனுமாகும்.

இம் மாவீரர்களுடைய அபூர்வ தர்கொடையின் உன்னத நிலையின் தன்மையை உணர்ந்த எமது தேசியத் தலைவர் திரு. வே பிரபாகரன் அவர்களின் கண்காணிப்பின் கீழ் அவர் ஆலோசனைகள் அனுசரணையுடன் அமைக்கப்

## மாவீரரை வணங்குவோம்

காலத்தை வென்றவர் எம் மாவீரர்
கருவியை ஏந்தி நாம் வருகின்றோம்
தாயகம் காத்திடும் தெய்வம் அவர்
வீரத்தை வணங்கி நாம் வருகின்றோம்.

ஆணாய் பெண்ணாய் இணைந்து நின்றார்
கழுத்தில் நஞ்சை அணிந்து வென்றார்
தலையில் தமிழை சுமந்து நின்றார்
இடுகாட்டினுள் வாழ்வதை அமைத்துக் கொண்டார்.

குண்டு மழைக்குள் நடந்து சென்றார்
நின்று அதற்குள் சிரித்து வென்றார்
குருதிச் சேற்றில் நடந்து சென்றார்
குறைவிலா வாழ்வதை அமைத்துத் வெந்தார்,

தாயக விடுதலை படைத்துச் சென்றார்
தாவியே எதிரியை அழித்து வென்றார்
முதலும் முடிவும் ஆகி நின்றார்
முடிவிலா உலகத்தில் நிறைந்து விட்டார்,

- யோ. யோகி

<u>கிளிநொச்சி, வவுனியா</u>

## மாவீரர் துயிலும் இல்லத்தில் மலரஞ்சலி செலுத்தும் வைபவம்

கிளிநொச்சி, வவுனியாக் கோட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தும் வைபவம் 21 - 11 - 1992 அன்று தொடக்கம் 27-11-1992 திகதி வரை நடைபெற உள்ளது.

இவ் வைபவத்தில் அனைத்துத் தமிழ் மக்களும் கலந்து கொண்டு இம் மண் மீட்பிற்காக உயிர் நீத்த வேங்கைகளை அஞ்சலிக்கும் முகமாக மாவீரர் தினத்தில் தினமும் பகல் 12.00 மணி முதல் 1.00 மணிவரை வருகை தந்து மலரஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு மலர்தூவி அஞ்சலிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கிளிநொச்சியில் கனகபுரம் துயிலுமில்லத்திலும் வவுனியாவில் ஈச்சம் குளம் துயிலுமில்லத்திலும் இந்நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

அத்துடன் வீதிகளுக்கு மாவீரர்கள் பெயர்களை சூட்டும் வைபவம் இன்று தொடக்கம் 25ஆம் திகதி வரை கிராம ரீதியாக நடைபெற உள்ளன.

வட்ட மட்டத்தில் 26ஆம் திகதி வரை பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் 27. 11. 92 அன்று கோட்ட மட்டத்தில் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

## மன்னார் மாவட்டத்தில் மாவீரர் ஏற்பாடுகள்

(மன்னார்]

மன்னார் மாவட்டம் எங்கும் மாவீரர் நாளையொட்டிய ஏற்பாடுகள் மிகவும் சிறப்பான முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட பிரதேசங்கள் எங்கும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. பூநகரி படகுச் சேவை ஊழியர்கள் மிகவும் பிரமாண்டமான முறையில் அலங்காரப் பந்தலும் அலங்கார வளைவுகளும் அமைத்துள்ளனர்.

மாவீரர் இறுதி நாளன்று ... சானிலும் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட உள்ளனர்.

இதேவேளை மாவீரர் வாரத்தையொட்டிய சிரமதான வேலைகள் காலை 9.00 மணியளவில் பத்தினிப்பாய் செம்பன்குண்டு, செக்காலை, பல்லாய் பகுதிகளிலும் மு. ப. 11.00மணியளவில் தம்பிராய், செல்வபுரம் பகுதிகளிலும் பி. ப. 2.00 மணியளவில் ஆலங்கேணிப் பகுதியிலும் பிற்பகல் 4.00 மணியளவில் சாமிப்புலம், நல்லூர் பகுதிகளிலும்

செய்வதற்கில்லை என்றும் தெரிவித்து வருகின்றது. ஆனால், இராணுவத் தீர்வையே நாடி நிற்கும் அரசாங்கம் இராணுவத்தை நவீனப்படுத்தி வருவதோடு இனப்பிரச்சினைத் தீர்விற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் இதுவரை தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்கவுமில்லை.

பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழ் எம், பி.க்களோ, அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சி என்பனவற்றின் வாதத்தின் இடையில் புகுந்து சிலர் அரசாங்கக் கட்சிகு ஆதரவாகவும், ஒரு சிலர் எதிராகவும் பேசுவதோடு பொதுவில் புலிகளுக்கு எதிராகஅரசாங்கம் தீவிர இராணுவ நடவடிககை எடுக்க வேண்டும் எனவும்,அதேவேளை தம்மிடம் ஆட்சி அதிகாரங்கள் கிடைக்குமாறு சில சலுகைகளை அரசாங்கம் தமிழருக்கு அளிக்க வேண்டும் எனவும். கோருகின்றன. அத்தோடு குழுவிற்கு நால்வர் என்ற எண்ணிக்கையைக் கொண்ட இத்தமிழ்க் குழுக்கள் தலைக்கு ஒரு தீர்வுத் திட்டம் எனவும் அறிவிக்கத் தொடங்கியுள்ளன.

இவ்வாறாக பல வருடங்களாக பலதரப்பினரும் பேசிவந்தாலும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான அரசியலில் சிறிதளவு முன்னேற்றம் தானும் ஏற்பட்டதாக இல்லை. விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாத தீர்வு எதுவும் சாத்தியப்படப் போவதில்லை என சகலரும் உணர்ந்திருந்தபோதிலும் ஒரு தீர்வுத் திட்டத்திற்கு அவர்களால் வரமுடியவில்லை.

இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் மேலும் இருவரைச் சேர்த்துக் கொள்ள மங்கள முனசிங்கா முற்படுவதாகத் தெரிகிறது, அதாவது மேலும் இருவரைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடலாம் என மங்கள முனசிங்கா எண்ணுவது வேடிக்கையாகவுள்ளது. இதனால் மங்கள முனசிங்கா மேலும் நெருக்கடிகளை அனுபவிக்கப் போகிறாரே ஒழிய லாபம் அடையப் போவதில்லை என்பதே உண்மை. முன்னரே கோரமில்லாமல் கூட்டம் நடத்த முடியாது கலையும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு இதனால் மேலும் நெருக்கடிகள் உருவாகலாம்.

இந்நிலையில், பாராளுமன்றத் தெரிவுக் குழு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்டும் என யாராவது எண்ணுவார்கள் என்றால் அவர்கள் ஏதும் அறியாதவர்கள் என்றே கூறலாம், இதே வேளை பாராளுமன்றதெரிவுக்குழு அரசியல் தீர்வை தராது எனத்தெரிந்திருந்தும், தரும் என பிரசாரம் செய்யும் அரசியல் வாதிகளை மோசடிக்காரர்கள் என்றே குறிப்பிடலாம்.

அத்துமீறிப் பிரவேசித்த வெளியார் சிலர் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், இத் தாக்குதலில் மாணவர் பலர் காயமடைந்தனர் எனவும், இவர்களில் மூவர் படுகாயமடைந்த நிலையில் காலி வர்களின் உதவியும் நாடப்படும் எனவும் மாணவர்கள் தரப்பில் கூறப்படுகிறது. இச் சம்பவம் தொடர்பாக இன்னமும் எவரையும் பொலிசார் கைது செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கடற்படை சிப்பாய் எயிட்ஸினால் மரணம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படை சிப்பாய் ஒருவர் ''எயிடஸ்''நோயினால் மரணம் அடைந்துள்ளார். இவர் இலங்கையின் 69 ஆவது எயிட்ஸ் நோயாளி ஆவார். இவருடன் 'எயிடஸ்' நோயினால் மரணம் அடைந்தவரின் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது

சிறிலங்கா கடற்படை தலைமையகத்தின் பிரதான வாயிலில் கடமை புரிந்த இவருக்கு வயது 36 என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மயங்கிய நிலையில் இவர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றும் சுமார் 5 நாட்கள் சிகிச்சை பெற்றார் என்றும் மேலும் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கடற்படையினர் இடையே 'எயிட்ஸ்' கிருமிகள் இருக்கக் கூடும் என்றும், எனவே இவர்களைத் தீவிர பரிசோதனை செய்ய வேண்டும் என வைத்தியசாலை வட்டாரங்கள் கடற்படைத் தளபதிக்கு ஆலோசனை கூறியுள்ளன.

## எட்டு ஆந்திர இளைஞர் கொழும்பில் தவிப்பு

(கொழும்பு)

ஆந்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த எட்டு இளைஞர்களிடமிருந்து தலா ஓர் இலட்சம் ரூபா பெற்றுக் கொண்டு அவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுத் தருவதாகக் கூறி மோசடி செய்த முகவர்கள் இருவர் அவர்களை கொழும்பில் தவிக்க விட்டுவிட்டதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக இலங்கை முகவர் ஒருவரும் மற்றும் இந்திய முகவர் ஒருவரும், பொலிசாரால் தற்போது தேடப்பட்டு வருகின்றனர்.

## தொற்று நோய்க்கு 3 சிறுவர் மரணம்

(குருநகர்)

பல்வேறு தொற்றுநோய்கள் காரணமாகக் குருநகர்ப்பகுதியில் குழந்தைகளின் மரணம் அதிகரித்துள்ளது.

நேற்று முன் தினம் புதன் கிழமை நிமோனியா, மலேரியா, மூளைக்காய்ச்சல் நோய்களால் இப்பகுதியைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் பலியாகி உள்ளனர்,

குருநகர் கடற்கரை வீதி றஞ்சிறகனிஸ்ரன் (9மாதம்) பாகறோட்டை சேர்ந்த மேரிறொக்சவின் அமலன் (7 வயது) டேவிட் வீதி செபஸ்தியாம்பிள்ளை மக்மிலன் [1½ வயது] ஆகிய குழந்தைகளே விசக்காய்சல்களுக்கு உள்ளாகி ஒரே நாளில் பலியானவர்களாவர். [21]

அவர் ஆலோசனைகள் அனுசரணையுடன் அமைக்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழீழ மாவீரர் பணிமனை இதன் உபநிலையங்கள் சகல மாவட்டங்கள் தோறும் இயங்கி வருகிறது. இங்குதான் எங்கள் மாவீரர்களுடைய வரலாறுகள் அனைத்தும் சரித்திரச் சான்றுகளாகக் கோர்வையிடப்பட்டு, ஆவணப்படுத்தப் படுகிறது. நிழ்வுகள் பட்டியல் வடிவம் பெறுகிறது. பெயர் விபரங்கள் தகவல்கள் தகைமைகள் ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது. புகைப்படப் பிரதிகள் கோவைப்படுத்தப்படுகின்றது.

தமிழீழமெங்கும் கொண்டாடப்படுகின்ற மாவீரர் நாளை, தியாகி திலீபன், அன்னை பூபதி, கரும்புலிகள், கடற் கரும்புலிகள், டன்னிரு வேங்கைகள் ஆகிய நினைவு தினங்களையும், மாதமாதம், அனைத்து மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டங்களையும், நெறிப்படுத்தி ஒழுங்கு செய்து நடாத்துவது இம்மாவீரர் பணிமனையின் செயற்றிட்டமாகும், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு, சுலோக பதாதைகள், சுவரொட்டிகளை அமைத்தல், வீதிக்கு, மண்டபங்கட்கு, சனசமூக நிலையங்கட்கு பெயர் சூட்டுதல், மாவீரர் பெயரால் வீரவணக்கக் கூட்டங்கள், போட்டிகள், படத்திறப்பு விழாக்கள் நடாத்துதல் அனைத்தையும் பார்வையிட்டு அனுமதித்து. ஆலோசனை வழங்கி, சரித்திரச் சான்று பெறும் வண்ணம் நெறிப்படுத்துவதும் இப்பணிமனையின் தலையாய கடமைகளாகும்.

நாம் வாழ்வதும், வாழ வழி வகுப்பதும் எம் சந்ததி இம் மண்ணைத் தம்மண்ணாக்கி, வாழையடி வாழையாக வாழ எம் போராட்டம் வளர்ந்து வெற்றியை நோக்கி வீறு நடைபோட்டு விடுவதன் மூலம் தமிழீழம் காண விதையாகி விட்ட மாவீரரை என்றும் போற்றுவோமாக.

னர்.

மாவீரர் இறுதி நாளன்று முழங்காவிலிலும் பண்டி விரிச்பகல் 4.00 மணியளவில் சாமிப்புலம், நல்லூர் பகுதிகளிலும் நடைபெறவுள்ளன.

## மாவீரர் உருவப்படங்கள் பெற்றுக் கொள்ளலாம்

தாயக விடுதலைப் போரில் தியாக மரணத்தை தழுவிக் கொண்ட மாவீரர்களில் மேலும் சிலரது உருவப்படங்கள் பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கப்டன் லாலா ரஞ்சன் (கனகநாயகம் ஞானேந்திரமோகன் பருத்தித்துறை) வீரவேங்கை ஆனந்த் (இராமநாதன், அருள்நாதன், மயிலிட்டி) வீரவேங்கை குமரிநாடன் (செல்லத்துரை செல்வநாயகம், வவுனியா) லெப். பயஸ் (அந்தோனிப்பிள்ளை ஜெஸ்லி, புதூர், மட்டக்களப்பு)

## கோட்ட ரீதியான 2-ம்நாள் மாவீரர் வார கூட்டம்

[யாழ்ப்பாணம்]

மாவீரர் நாளை முன்னிட்டு இன்று கோட்ட மட்டத்தில் நடைபெறவிருக்கும் கூட்ட விபரங்கள் பின்வருமாறு அமைகின்றன.

வலிகாமம் கோட்டத்தில் சண்டிலிப்பாய் வட்டத்தில் நவாலி முருகமூர்த்தி கோவிலிலும், கோப்பாய் வட்டத்தில் ஆவரங்கால் சிவன் கோவிலிலும், யாழ். வட்டத்தில் குமாரசாமி மண்டபத்திலும் இரவு 7-30 மணியளவில் கூட்டம் நடைபெறும்.

தென்மராட்சிக் கோட்டத்தில் வரணி மகாவித்தியாலயத்தில் கொடிகாமம் வட்டஅவை பொறுப்பாளர் விபுலன் தலைமையிலும் கைதடி வடக்கு குருசாமி வித்தியாலயத்தில் மாலை 7-00 மணியளவில் கைதடி வட்டப் பொறுப்பாளர் தமிழன் தலைமையிலும்

வடமராட்சிக் கோட்டத்தில் கரவெட்டி வட்டத்தில், திரு. மணி வண்ணன் தலைமையில் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்திலும் பிற்பகல் 7-30 மணியளவில் நாவற்குழிலவனிதா குடியிருப்பிலும் கடற்புலிகளால் வலி கிழக்கு வட்டத்தில் இரவு 7-00 மணியளவில் நாவாந்துறை றோமன்கத்தோலிக்க பாடசாலையிலும் வலி-வடக்கில் இரவு 7-00 மணியளவில் விக்டோறியாக் கல்லூரியிலும், பொலிகண்டி கந்தவனம் பகுதியிலும், வலிகிழக்கில் மருதங்கேணி அமெரிக்கத் தமிழ் கலவன் பாடசாலையிலும் நடைபெற உள்ளன.

## மாவீரர் நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் மாவீரர் வார நினைவு விழா நாளை (23.11.92) காலை 9.00 மணியளவில் கல்லூரி அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களும் சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சோ. வேலாயுதம் அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

இந் நிகழ்வில் செ.விநாயகமூர்த்தி ஞா.திருக்கேதீஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர் தொடர்ந்துகலை நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளன

ஈழநாதம்

# புலிகளுக்கு எதிராக வெளிநாட்டில் பிரசாரம்

## - அஷ்ரப் கோரிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருக்கும் சிறிலங்காத் தூதுவர்கள் புலிகள் எதிர்ப்பு பிரசாரத்துக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கூறியுள்ளார். பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; வெளிநாடுகளில் இருக்கும் விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை மூடும் வகையில் தூதுவர்கள் செயலாற்றவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தன் மூலம் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா முஸ்லிம் சமூகத்துக்கு துரோகம் இழைத்துவிட்டதாகவும் அஷ்ரப் தமது உரையின் போது குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை திரு. அஷ்ரப் பின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அவருக்கு மேலதிக பாதுகாப்பு அளிக்கும்படியும் ஜனாதிபதி பிரேமதாசா பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## தடுப்பு முகாமிலுள்ளோர் பிரச்சினை ஆராயப்படும்

(கொழும்பு)

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள அமைக்கப்பட்ட ''ஜயலத்'' கமிஷன் தற்போது தடுப்பு முகாம்களில் உள்ள கைதிகளை சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய உள்ளது.

இத்தகவலை அக்குழுவின் தலைவர் டி. ஜீ. ஜயலத் கொழும்பு தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். இதன் முதல் கட்டமாக பெலவத்த தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்துள்ளனர். நீண்டகாலமாக நீதி விசாரணை இன்றி தடுத்து வைத்துள்ள சிறைக் கைதிகளை இக்குழுவினர் சந்தித்துள்ளனர்.

## தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு நேர அட்டவணை

கீழ்வரும் நேர அட்டவணையின் படி உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளதாகத் தமிழீழ மீட்பு நிதி நிதிப் பொறுப்பாளர் வெற்றி அரசன் அறிவித்துள்ளார்.

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| நல்லூர் | ''நாவலர் கலாசார மண்டபம்'' நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | 23-11-92 | 8.00—9 00 |
| யாழ்ப்பாணம் | ,, | ,, | 9.00—10.00 |
| காரைநகர் | ,, | ,, | ,, |
| வேலணை | ,, | ,, | ,, |
| கோப்பாய் | ,, | ,, | 10.15—11.15 |
| உடுவில் | ,, | ,, | 11.15—12.15 |
| தெல்லிப்பழை | ''வட்டு-இந்துக் கல்லூரி'' சித்தன்கேணி. | ,, | 3.00—4.00 |
| சங்கானை | ,, | ,, | ,, |
| மானிப்பாய் | ,, | ,, | ,, |
| சாவகச்சேரி | "சாவகச்சேரி இந்துக்கல்லூரி'' சங்கத்தானை. | 24-11-92 | 9.00—11.00 |
| பச்சிலைப்பள்ளி | ,, | ,, | ,, |

O/L Dec. 1992

★ கணிதம்
★ விஞ்ஞானம்
★ தமிழ்
★ சமூகக்கல்வி
★ ஆங்கிலம்
★ சமயம்
★ வர்த்தகம்
★ சித்திரம்
★ நடனம்
★ சங்கீதம்
★ விவசாயம்
★ மனைப் பொருளியல்

ஆகிய பாடங்களுக்கான
★ மாதிரி வினாத்தாள்

# கிளான்சி பெர்னான்டோவை எதிர்க்கட்சிகள் கைவிட்டன

## -ஹட்சன் சமரசிங்கா

(கொழும்பு)

டென்சில் கொப்பேகடுவ கொலையுண்ட போது தேசிய துக்கம் அறிவித்து வெள்ளைக் கொடி பறக்க விடுமாறு கோரிய எதிர்க் கட்சிகள் கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ உயிரிழந்த போது அவ்வாறான கோரிக்கை எதையும் விடாமல் அரசாங்கத்தை பதவி விலகச் சொல்கின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினரான ஹட்சன் சமரசிங்கா குறிப்பிட்டார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில்; கொப்பேகடுவ 'நடல' குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் தான் எதிர்க் கட்சிகள் ஆர்ப்பரித்தன என்றும், கிளான்சி பெர்னான்டோவை அவர்கள் கைவிட்டு விட்டனர் இது ஒரு பாகுபாடு என்றும் குறிப்பிட்டார்.

# புலிகள் இயக்க உறுப்பினர் வெளியேறுவது பம்மாத்து

## – சிறிகாந்தா

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பலர் வெளியேறியிருக்கிறார்கள் என சில பத்திரிகைகளில் வந்த செய்திகள் ஒரு 'பம்மாத்து' என டெலோ குழுவின் ஒரு பிரிவின் தலைவர் ஜி. எஸ். காந்தா இந்துப் பத்திரிகைக்கு தெரிவிததுள்ளார்.

அவ்வாறு எவராவது வெளியேறவுள்ளதாக கருதப்படுமானால் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காக மேலும் கடுமையாக செயற்படப் போகிறார்கள் என்பதையே அர்த்தப்படுத்துகிறது என அவர் மேலும் கூறினார்.

# உணவுப் பொருள் எடுத்துவர சந்திப்பில் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

''குமாரி'' என்ற கப்பல் மூலம் கொழும்பில் இருந்து அத்தியாவசியப்பொருள்களை எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். அரசாங்க அதிபருக்கும், யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கைக்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி கப்பல் மூலம் பொருள்களை எடுத்து வருவதற்கு முற்பணம் செலுத்துவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. அதேவேளை யாழ். செயலகம் சுமார் 50 மில்லியன் ரூபாவை ஏற்கனவே முற்பணமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதனால் குமாரி கப்பல் சேவை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் செயலகத்திற்கெதிரான வெகுஜனப் போராட்டம் கைவிடப்படும்நிலை ஏற்பட்டிருக்கிறது.

(க)

# தமிழ் ஆசிரியர் வெற்றிடம்; சிங்களவரால் நிரப்ப முயற்சி

''சிங்கள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் சிங்கள ஆசிரியர்களில் மேலதிகமாக இருப்போரை தமிழ் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதனால் தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாது. தமிழ்ப் பாடசாலைகளுக்குத் தேவையான தமிழ் ஆசிரியர்களை உடனடியாக நியமிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள்''

இவ்வாறு ஊவா மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டு உரையாற்றிய ஊவா மாகாண உறுப்பினர் வே. வேலாயுதம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ஊவா மாகாணத்தில் தகுதியும் தராதரமும் உள்ள பலர் நீண்ட காலமாகவே தொண்டர் ஆசிரியர்களாகவே இருக்கின்றனர். ஆனால் ஊவா மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறைக்கு சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதனை நான் வன்மையாகக் கண்டனம் செய்கின்றேன் எனத் தெரிவித்தார்.

காவியமான மாவீரர்கள் எங்கே? — உன் கண்களில் அல்லவோ ஆடுகிறார் இங்கே ஆயிரம் தடவைகள் பாடை வராது — களம் ஆடவா! வந்தால் தோல்வி இராது.

(மாவீரர் நாள் - 1992 சுவரொட்டிகள், பதாதை வசனங்கள்)

# டிசம்பர்மாத இறுதிக்குள் பட்டதாரிகளுக்கு நியமனம்

[கொழும்பு]

எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பட்டதாரிகள் அனைவருக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது. இவர்களில் எண்ணூறு பேர் தமிழ் மொழிப் பட்டதாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது இவர்கள் ஜனவரி முதல் பாடசாலைகளில் கடமை ஏற்க உள்ளனர். ஏற்கனவே 1000 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது தெரிந்ததே. தற்போது மேலும் 7000 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளனர்.

பழுதடைந்த படுத்தி 'பாஜ்'ஜில் உள்ள கடல் நீரை வெளியே மீட்டெடுக்கும் அவல நிலையால் தொழிலாளர்கள் உணவுப் பொருள்களை இறக்குவதில் கூடுதல் நேர காலத்தை வீணே செலவிட வேண்டி யேற்பட்டுள்ளது.

(யோ)

# வவுனியாவில் தீ விபத்து

(வவுனியா)

வவுனியாவில் கடை வீதியில் இருக்கும் கூட்டுறவுச் சங்கத் தலைமைச் செயலக நிர்வாக அலுவலகப் பகுதி நேற்றுமுன் தினமிரவு திடீரெனத் தீப் பற்றி எரிந்தது. அயலவர்கள் கூடி தீயை அணைத்தனர். இத் தீ விபத்துக்கு மின் ஒழுக்கே காரணம் என்று பின்னர் பொலிஸார் கூறினர்.

தமிழீழ

வைத்தனர்.

குடா நாட்டில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு விசேட அலங்கார வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக குடாநாட்டின் பல்வேறுபகுதிகளான நல்லூர், கச்சேரியடி, திருநெல்வேலி, சுன்னாகம், கோண்டாவில், கொக்குவில், இணுவில், இருபாலை, கோப்பாய், கல்வியங்காடு, சங்கானை ஆகியபகுதிகளிலும், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலும் பல இடங்களில் வர்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறன.

இவற்றைவிட வன்னிப்பிராந்தியத்திலும் எழிச்சியூட்டும் பல்வேறு அலங்காரவேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதால் இதனால் வன்னிப் பிராந்தியமே எழிச்சிக்கோலம் பூண்டிருப்பதாக அங்கிருந்துஎமக்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.


வடமராட்சி வடக்கு கடற்புலிகளின் இன்பருட்டியில் அமைந்துள்ள பிரதான பந்தலில் கடற்புலிகள் தளபதி திரு. கங்கை அமரன் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். கடற்புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி உமாலினி ஈகைச் சுடரை ஏற்றி வைத்தார் இப்பிரிவில் இதுவரை காலமும் வீரமரணமடைந்த 186 மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு பெற்றோர் மலரஞ்சலியும்ஈகைச்சுடரும்செலுத்தினார்கள்.

கிராமக்கோட்டில் அமைக்கப்பட்ட பருத்தித்துறை வட்டத்திற்கான பந்தலில் 140 மாவீரர்களின் படங்களும், நெல்லியடியில்அமைக்கப்பட்ட பந்தலில் 151 மாவீரர்களின் படங்களும் வைக்கப்பட்டன. மக்கள் மாவீரர்களுக்கு மலர் இட்டு அஞ்சலி செய்தனர்.

மற்றும் இப்பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகள் முகாம்கள், அலுவலகங்கள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள் சிகையலங்கரிப்பாளர் சங்கங்கள், மீனவர்சங்கங்கள், சனசமூக நிலையங்கள், வர்த்தக சங்கங்கள், தனியார் போக்குவரத்துச் சங்கங்கள், யாவற்றிலும் தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டன.

இதேவேளை பருத்தித்துறை நகரப்பகுதியில் கப்பல் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

(க), (யோ), (21), (24), (பா), (ச), (நி)



"மாவீரர்

| | | | |
|---|---|---|---|
| பச்சிலைப்பள்ளி | ” | ” | ” |
| பருத்தித்துறை ‘‘வடஇந்துமகளிர் கல்லூரி’’ | | | |
| பருததித்துறை. | | ” | 2.15—3.30 |
| வடமராட்சி கிழக்கு | ” | ” | ” |
| கரவெட்டி | ” | ” | 3.30—4 30 |

# தவறிவிட்டது

மானிப்பாய்க்கும் சங்கானைக்கும் இடையில் ஒரு பேர்சும் அடையாள அட்டையும் [இல. 663451820 V] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் டாம்போ தையல் நிலையம் சங்கானையில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

இ. திருக்குமாரன்
நிருசன் ரெக்ஸ்,
மல்லாகம் சந்தி, மல்லாகம். [3684]

ஆகிய பாடங்களுக்கான

★ மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

★ வீட்டில்வைத்து விடையளித்து தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

*BOND BOOK STALL*
**58A,**
**ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(சி/5449)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி முதலாவது பிறந்த தினப்





2-ஆம் லெப். இலக்கனா
[பாலச்சந்திரன் பிறேமினி]
பிறப்பு: 15-01-1975
வீரச்சாவு: 22-11-1990

பாலச்சந்திரன் இலக்கனா
[பிறேமினி]
பிறப்பு: 26-11-1991

தமிழ்த்தாயின் மடியினிலே பிறேமினியாய் வளர்ந்து
தமிழீழ மண்ணினிலே இலக்கனாவாய் மடிந்து
அதே தமிழ்த்தாயின் வயிற்றினிலே இலக்கனாவாய் பிறந்து
தமிழ் மண்ணின் விடிவுக்காய் வாழ்கிறாள் பிறேமினியாய்

கல்வயல்,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்
[3357]

இவ்வாறு ஊவா மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில்கலந்து கொண்டு

## கூட்டம்

இன்று ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10-00 மணிக்குத் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் தமிழீழக் கல்விக கழகப் பணிமனையில் நடைபெறும் எனவும் தவறாது சகல நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் வருகை தரும் வண்ணம் செயலாளர் கேட்டுள்வார்.

## குமண புதனன்று வரும்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடா நாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு ‘‘குமண’’ கப்பல் எதிர்வரும் புதன்கிழமை பருத்தித்துறைஙய வந்தடையும் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இக்கப்பலில் அரிசி,மா.சீனி, தீப்பெட்டிமற்றும் சிலபொருள்களும் எடுத்துவரப்படுசின்றன. இக்கப்பலில் தபால் பொதிகள் எடுத்து வரப் படுகின்றனவா? என்பது பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை என அவர் மேலும்தெரிவித்துள்ளார்[பா]

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பதவி உயர்த்தப்படுவதற்கான பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

அடுத்த மாதம் 22 ஆம் திகதி திருக்கோணமலையில் நடைபெற இருக்கும் இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்த மாதம் 15 ஆகும்.

கண்டனம் செய்கின்றேன் எனத் தெரிவித்தார்.

## சமய அறிவுப் போட்டி

கொழும்புத்துறைமணிப்புரி அருள்மிகு ஸ்ரீமுருகன் ஆலயக் கும்பாபிஷேகத்தைமுன்னிட்டு இன்று 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு மேற்படி ஆலயத்தில் மணிப்புரி இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் சமய அறிவுப்போட்டி மன்றத் தலைவர் செல்வன் யோ. யோகானந்தன் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு விண்ணப்பித்த சகல மன்ற உறுப்பினர்களையும் இன்று காலை சமய அறிவுப் போட்டியில் பங்குபற்றுமாறு மன்றச் செயலாளர் செல்வன் ம. சுரேஸ்குமார் தெரிவித்துள்ளார். (24)

## தலைமன்னாரில் 6 பேர் கைது

(கொழும்பு)

இந்தியாவில் தமிழ்நாட்டிலிருந்துமண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களை கடத்திவந்ததாகக் கூறப்படும் ஆறு பேர் தலைமன்னாரில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணபொதுக் கூட்டம் இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற உள்ளது.



# ‘‘மாவீரர் வார சிந்தனை’’

‘‘இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன் ஏனெனில் இந்தமண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது.’’

‘‘இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன் ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது. எனது வாழ்விடமாய்த் திகழ்கிறது.’’

‘‘தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டுக் கழகம்’’

(சி-5442)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 21-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6788

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

22-777, 28-3869, 22-9005, 27-5482, 28-8155, 26-3530, 42-3239, 41-4719, 27-4289, 26 5560, 27-0849, 26-3972, 24-5509, 26-4282, 27-9030, 27-8959, 27-5217, 28-8444, 42-7975 41-9487, 26-6417, 41-1799, 26-0512, 26-5760, 26-8674.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்

28-4672, 28-3672, 28-1020, 28-3233, 24 6356, 24-8631, 24-1983, 24-5437, 26-7393, 26-3321, 26 9703, 26-9495, 26-5071, 26-8052, 28-4162, 41-1092, 41-2479, 40-2829, 41-8432.

**பயன் கருதா பலன் தரும் மரம்**
**இதை உணரா மனிதரா நாம்.**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.